# வளர்ப்பு மாடுகளின் அதிகரிப்பும் உடவளவை தேசிய வனம் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்களும்

*எம். அஜிவதீன், விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.*

**அறிமுகம் :**

இலங்கையின் ஆற்று வடிநிலை மற்றும் உலர் வலய அபிவிருத்தித் திட்ட முன்னெடுப்பின் கீழ் 1970ஆம் ஆண்டு குடியேற்றம், விவசாய அபிவிருத்தி, நன்னீர் மீன்பிடி, கைத்தொழில் ஊக்குவிப்பு, மின் உற்பத்தி, பிரதேச மற்றும் கிராமிய அபிவிருத்தி எனும் பல நோக்கங்களை இலக்காகக் கொண்டு வளவை கங்கை அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்ட அமுலாக்கத்தின்போது வாழ்விடமிழந்த வனவிலங்குகளுக்குப் புகலிடமளிக்கும் நோக்குடன் உடவளவை நீர்த்தேக்கத்தைச் சுற்றியுள்ள பிரதேசம் 1972இல் உளவளவை தேசிய வனமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இருப்பினும் இன்று இத்தேசிய வனத்தின் பெரும்பாலான பகுதி நிரந்தர, தற்காலிக மற்றும் நாளாந்த அடிப்படையில் விவசாயம், மீன்பிடி, மந்தை மேய்ப்பு, விறகு மற்றும் மூலிகைச் சேகரிப்பு, வேட்டையாடுதல், மரம் வெட்டுதல் மற்றும் அகழ்வு நடவடிக்கைகளுக்காக அயலவர்களினாலும், தூரப்பிரதேசத்தினாலும் ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டுள்ளது.

இலங்கையின் மரபு ரீதியான மந்தை மேய்ப்பில் வளவை வடிநிலப் பகுதி சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது. இப்பகுதி மக்களில் ஒரு பகுதியினர் பரம்பரை பரம்பரையாகத் தொடர்ச்சியாக மந்தை மேய்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் ஒழுங்கற்ற திட்டமிடல் காரணமாக, மந்தை மேய்ப்பவர்களுக்கு எந்தவிதமான மாற்று

வசதிகளும் செய்து கொடுக்காது உடவளவை தேசிய வனத்தின் எல்லைகள் வரையறை செய்யப்பட்டதன் விளைவாக மந்தை மேய்ப்பாளர்கள் தமது மேய்ச்சல் நிலங்களை இழந்தனர். எனினும் அவர்கள் தமது மரபு ரீதியான தொழிலை மாற்றிக் கொள்ளவில்லை. இவ்வாறு தேசியவன உருவாக்கம் காரணமாக தோற்றம் பெற்ற முரண்பாடுகள் மந்தை மேய்ப்பாளர்களையும் பாதித்துள்ளதுடன் இலங்கையின் தேசிய மரபுரிமையான உடவளவை தேசிய வனத்திற்குப் பாரியதோர் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இம்முரண்பாடு தொடருமானால் உடவளவைத் தேசிய வனம் ஒரு சில ஆக்கிரமிப்புச் செடிகளைக் கொண்ட மேய்ச்சல் நிலமாக மாறக் கூடிய அபாயம் உள்ளது.

**உடவளவை தேசிய வனத்தின் முக்கியத்துவம் :**

உடவளவை தேசிய வனம் உருவாக்கப்பட்டதன் பிரதான நோக்கங்களாவன.

1. பெறுமதிமிக்க இடை மத்திய வலய உலர் காடுகளைப் பாதுகாத்தல்.
2. உயிர்ப் பல்லினத் தன்மையைப் பாதுகாத்தல்.
3. மேல் வளவை நீரேந்து பிரதேசத்தின் மண்ணரிப்பைத் தடுத்தலும், உடவளவை நீர்த் தேக்கத்தில் வண்டல் படிதலைக் குறைத்தலுமாகும்.

கொழும்பிலிருந்து கிட்டிய தூரத்தில் (வாகனத்தில் 4 மணித்தியால பிரயாண தூரம்) அமைந்துள்ள உடவளவைத் தேசிய வனம் அடிப்படையிலேயே பெறுமதி மிக்க தேசிய வனமாகும். இங்கு 23 வகையான நன்னீர் மீன் இனங்களும், 12 வகையான அம்பியங்களும், 49 வகையான ஊர்வனவும், 184 வகையான பறவை இனங்களும், 44 வகை பாலூட்டிகளும் இனங் காணப்பட்டுள்ளன.

இலங்கையின் ஏனைய வனவிலங்கு தேசிய வனங்களுடன் ஒப்பிடுகையில் உடவளவை தேசிய வனம் பல வழிகளிலும் முதன்மை பெறுகின்றது. முதலாவதாக, கூடுதலான வனவிலங்குகளைக் கொண்டுள்ளதுடன் காட்டு யானைகளை எந்தப் பருவ காலங்களின் போதும் காண முடியும். அடுத்தது, மத்திய ஆபிரிக்காவின் சவன்னா காலநிலைச் சூழல் தொகுதி அமைப்பை இலங்கையில் நோக்கக் கூடிய ஒரே இடம் உடவளவை தேசிய வனமாகும். மேலும் கடும் வரட்சிப் பருவங்களில் உருஹுனு (யாலை) தேசிய வனத்தில் கூட காட்டு யானை, மான் போன்ற வனவிலங்குகளைக் காண்பது அரிதாக உள்ள போதும், உடவளவை நீர்த்தேக்கத்தை அண்மித்த புல்வெளிகளில் வனவிலங்குகளைப் பரவலாக அவதானிக்கலாம். எனவே, உடவளவை தேசிய வனம் எமது நாட்டின் சூழலியல் மற்றும் சூழல்சார் உல்லாசப் பயணத்துறையின் கேந்திரஸ்தானம் அல்லது மையப் பகுதி என்பது பொருத்தமானதாகும்.

**வளர்ப்பு மாடுகள் :**

உடவளவை தேசிய வனத்தின் எல்லை வலயத்தினுள் வசிப்பவர்களில் சுமார் 8% - 10% மானவர்கள் மந்தை மேய்ப்பில் ஈடுபடுகின்றனர். வன ஜீவராசிகள் திணைக்களத்தின் 2002 ஆம் ஆண்டு கணிப்பீட்டின்படி, 12000 எருமை மாடுகளும், 3000 பசு மாடுகளும் நாளாந்தம் மேய்ச்சலுக்காகத் தேசிய வனத்தினைப் பயன்படுத்துகின்றன. இவை இடையர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் காலை வேளையில் தேசிய வனத்தினுள் செலுத்தப்பட்டு மாலைவரை மேய்ச்சலுக்கு விடப்படுகின்றன.

தேசிய வனத்தின் உட்பகுதியிலும், வெளிப்பகுதியிலுமாக மொத்தம் 53 மாட்டுத் தொழுவங்கள் காணப்படுகின்றன. கிழக்கு எல்லையிலிருந்து சுமார் 7000 வளர்ப்பு மாடுகளும், வடக்கு மற்றும் மேற்கு எல்லைகளிலிருந்து தலா 3000 வளர்ப்பு மாடுகளும், தென் எல்லையிலிருந்து 2000 மாடுகளும், நாளாந்தம் தேசிய வனத்தினுள் செலுத்தப்படுகின்றன.

தேசிய வனத்தினுள் நடைபெறும் மந்தை மேய்ப்பு நடவடிக்கைகளில் அப்பகுதி மக்களின் பங்கேற்பு மிகக் குறைவாகும். அப்பகுதியில் உள்ள அநேக எருமை மாடுகளின் உரிமையாளர்கள் அம்பாந்தோட்டை, திஸ்ஸமகாராம, கதிர்காமம், தங்காலை, அம்பாந்தோட்டை, எம்பிலிப்பிட்டிய, வீரகெடிய, வலஸ்முல்ல போன்ற தூரப் பகுதிகளிலேயே வாழ்கின்றனர். இவர்கள் தமது கால்நடைகளைக் கவனிப்பதற்காக உடவளவை பகுதி இடையர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளனர்.

## உடவளவை தேசிய வனத்தைச் சுற்றியுள்ள மாட்டுத் தொழுவங்களின் விபரம் - 2001

| எல்லைப் பிரதேசம் | கிராமம் / அமைவிடம் | தொழுவங் களின் எண்ணிக்கை | கால் நடைகளின் (எருமை/பசு மாடு எண்ணிக்கை | உரிமையாளர்கள் |
|---|---|---|---|---|
| தென் எல்லை | எகமுதுகம | 01 | 400 | சுனில் கம்பார (Herder) |
| | சம்பத்கம | 01 | 50 | லொகு மல்லி |
| | மவ்ரகம | 02 | 175 | அகுரஸ்ஸ லொகு மல்லி |
| | | | 60 | ஹோரேவெல மஹிந்த |
| | நெலும் வாவி | 02 | 150 | ருன் கம்பார |
| | | | 60 | உக்கும் மஹத்தயா |
| | இந்துலில் புர | 01 | 100 | ஹின்னி மஹத்தயா |
| கிழக்கு எல்லை | விஜேபுர | 01 | 60 | - |
| | 23ம் கொலனி | 01 | 25 | குரனெ |
| | யானை வழி | 02 | 250 | ராலஹாமி |
| | | | | மனேஜர் மஹத்தயா |
| | கிவுல | 03 | 150 | - |
| | ஹம்பேகமுவ கொலனி | 02 | 400 | - |
| | ஹம்பேகமுவ | 02 | 2000 | - |
| | ரத்தபலகம | 05 | 400 | K.L. குணதிலக |
| | | | 300 | K.L. விமலசேன |
| | | | 100 | புஞ்சி மஹத்தயா |
| | | | 90 | D. குணதாச |
| | | | 50 | சுகத்தா திஸா |
| | வடமட | 04 | 980 | ஹீன் மஹத்தயா (400) |
| | குகுல்கடுவ | 03 | 300 | - |
| வடக்கு எல்லை | பொகுதன்ன | 02 | 300 | அதுகோரள |
| | | | 400 | பல்லேபத்த அமரே |
| | இதகலயாய | 01 | 75 | - |
| | ஹந்தரிகொட | 01 | 150 | - |
| மேற்கு எல்லை | மகா ஆர<br>பலவங்கல<br>பனஹடுவ<br>குருமலயாய<br>கல்பாய | 19 | | ஹீன் மஹத்தயா (2) |
| | | | | சுதா |
| | | | | பொட்(d)டா |
| | | | | சுமி |
| | | | | சாஜன் மஹத்தயா |
| | | | | சூடி மல்லி |
| | | | | ராணி கம்பார |
| | | | | பால சூரிய |
| | | | | ரலா |
| | | | | கலு அய்யா |
| | | | | மஹதுான் |
| மொத்தம் | - | 53 | 9525 | - |

(மூலம் : வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் - 2001).

மரபு ரீதியான மந்தை மேய்ப்பு கவர்ச்சிகரமான வருமானத்தைப் பெற்றுக் கொடுக்காவிடினும் நவீன மந்தை வளர்ப்புச் செலவுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் போது இம்மந்தை மேய்ப்பு முறை இலகுவானதும், கூடிய வருமானம் ஈட்டித் தரக் கூடியதுமாகும். எடுத்துக் காட்டாக சுமார் 150 மாடுகளை வளர்க்கும் ஒருவர் வருடாந்தம் சுமார் 600,000 ரூபாவை பால், தயிர் மற்றும் இறைச்சிக்காக மாடுகளை விற்பதன் மூலமும் வருமானத்தைப் பெறமுடியும். அதாவது 150 மாடுகளின் பெறுமதி நிலையான சொத்தாக இருக்க மாதாந்தம் சராசரி 50,000 ரூபாவரை வருமானம் பெறுகின்றார். எனவே, இங்கு நோக்கப்பட வேண்டிய முக்கிய அம்சமானது இப்பகுதியின் மரபு ரீதியான மந்தை மேய்ப்பு அப்பகுதி சமூக முன்னெடுப்பிற்கும், ஜீவனோபாயத்திற்கும், உணவுப் பாதுகாப்பிற்கும் வழி வகுப்பதுடன் நாட்டின் தயிர் மற்றும் இறைச்சி உற்பத்தியில் கணிசமான அளவு பங்கெடுக்கின்றது என்பதையும் மறுக்க முடியாது.

## மந்தை மேய்ப்பினால் உடவளவை தேசியவனம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் :

வளர்ப்பு மாடுகளின் வேகமான அதிகரிப்பினால் உடவளவை தேசிய வனம் அதன் உள்ளார்ந்த பெறுமதியை இழந்து வருவதுடன் அதன் முகாமைத்துவத்திற்கும் பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இத்தாக்கங்கள் நுண்ணளவு தொடக்கம் பேரளவு வரை வேறுபடலாம். அவையாவன :

### (i) மிகை மேய்ச்சல் :

மேய்தல் மூலம் உணவைப் பெற்றுக் கொள்ளும் விலங்குகள், மேம்புல் மேய்தல் மூலம் உணவைப் பெற்றுக் கொள்ளும் விலங்குகள் என இருவகையான தாவர உண்ணிகள் காணப்படுகின்றன. இந்த அடிப்படையில் மேம்புல் மேய்தல் மூலம் உணவைப் பெற்றுக் கொள்ளும் யானைகளை விட நேரடியாக மேய்தல் மூலம் உணவைப் பெற்றுக் கொள்ளும் மாடுகள் சூழல் தொகுதியில் கூடிய தாக்கத்தைச் செலுத்துகின்றன.

வளர்ப்பு மாடுகள் தொடர்ச்சியாக மேய்தலில் ஈடுபடுவதனால் இயற்கைத் தாவரச் சூழலும், தாவரச் சந்தானமும் மாற்றியமைக்கப்படுகின்றன. மாடுகள் விரும்பி உண்ணும் செடிகளும், மரங்களும் சேதமாக்கப் படுவதுடன் மிகை மேய்ச்சல் காரணமாகத் தேசிய வனத்தினுள் வெற்று நிலத்தின் பரப்பளவு அதிகரித்து வருகின்றது. மேலும் மொத்த உயிர்த் திணிவு அளவும், சக்திக் கொள்ளளவுத் திறனும் குறைவடைகின்றது.

இலத்தீன் அமெரிக்கா மற்றும் மத்திய ஆபிரிக்க தேசிய வனங்களில் வேகமாகப் பரவிவரும் உன்னிச்செடி (Lantana Camara) மிகை மேய்ச்சலின் விளைவாக உடவளவை தேசிய வனத்தை ஆக்கிரமித்து வருகின்றது. அதாவது மாடுகள் தினந்தோறும் தாம் விரும்பும் செடிகளை மேய்வதனால் விலங்கு உணவிற்கோ சூழல் தொகுதிக்கோ பொருத்தமற்ற உன்னிச்செடி போன்ற ஆக்கிரமிப்புச் செடிகள் சுதந்திரமாகப் போட்டியின்றி செழித்து வளர்வதுடன் சூழல் தொகுதியின் இயற்கைச் சமநிலையைச் சீர் குலைக்கின்றது.

(ii) **பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தினுள் வசிக்கும் வன விலங்குகளுடனான மோதல் :**

அங்கிகளின் வகை, அவற்றின் எண்ணிக்கைக்கு ஏற்ப தேசிய வனத்தின் பரப்பு நிர்ணயிக்கப்படுகின்றது. இப்பிரதேசத்தனுள் மேலதிகமாக 15,000 வளர்ப்பு மாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதன் விளைவாகச் சூழலியல் அடர்த்தி அதிகரித்துள்ளது. 323 சதுர கிலோ மீற்றர்கள் பரப்பளவுடைய உடவளவை தேசிய வனத்தில் ஆரம்பத்தில் ஒரு சதுர கிலோ மீற்றர் புல் நிலத்தினைச் சராசரி 3 யானைகளும், 3 காட்டு மாடுகளும் மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்திய நிலை மாறி இன்று அவற்றுடன் ஒவ்வொரு சதுர கிலோ மீற்றர் புல் நிலத்திற்கும் 100 வளர்ப்பு மாடுகள் விகிதம் அதிகரித்துள்ளன.

இம்மிகையான அடர்த்தி, வன விலங்குகளுக்கும், வளர்ப்பு மாடுகளுக்கும் இடையில் தீவனப் போட்டியை ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவாக யானைகள் தேசிய வனத்தை விட்டு வெளியேறி மானிடக் குடியிருப்புக்களுக்குத் தொந்தரவு விளைவிக்கின்றன. மேலும் எருமை மாடுகள் தேசிய வனத்தினுள் உள்ள சிறிய குளங் குட்டைகளினுள் படுப்பதனால் அந்நீர் நிலை சேற்று நீர் நிலையாக மாற்றம் அடைகின்றது. இதன் விளைவாகத் தூய நீரை அருந்தும் மான், மரை, முயல், மற்றும் பறவை இனங்கள் தூய நீர் தேடி வேறு இடங்களுக்கு இடம் பெயர்கின்றன. கடந்த சில வருடங்களாக உடவளவை தேசிய வனத்தினுள் மான், மரை இனங்களைக் காண்பது மிக அரிதாக உள்ளது. மேலும், வளர்ப்பு மாடுகளின் நடமாட்டம் சிறிய அங்கிகளுக்கு இடையூறாக அமைவதுடன், இம்மாடுகள் பல்வேறுபட்ட நோய்களையும் தேசிய வனத்தினுள் காவி வரக்கூடிய நோய்க் காவியாகவும் செயற் படுகின்றன.

### (iii) நிலச் சீரழிவும் வண்டல் படிதலும் :

உடவளவை தேசிய வனம் உருவாக்கப்பட்டதன் பிரதான நோக்கங்களில் மண்ணரிப்பையும், வண்டல் படிதலையும் தடுப்பதும் அமைந்து காணப்படுகின்றது. ஆனால், இன்று வளர்ப்பு மாடுகளின் நடமாட்டம் காரணமாக மேற்படை மண் சிதைவதைவதுடன், மேற்பரப்புத் தாவரப் போர்வை அடியோடு அகற்றப்படுவதனால் இடைமறித்தலும், ஊடுவடிதலும் குறைவடைந்து கழுவு நீரோட்ட அளவு அதிகரித்துள்ளதன் விளைவாக மண்படை வேகமாக அரிக்கப்பட்டு வருகின்றதுடன் நீர்த்தேக்கத்தின் கொள்ளளவில் 40% வண்டலினால் நிரப்பப்பட்டுள்ளது.

மேற்பரப்புத் தாவரங்கள் மிகை மேய்தலுக்கு உட்படுவதனால் மண்ணின் ஆவியாக்கம் அதிகரித்து புவி மேற்பரப்பு வரட்சித் தன்மைமிக்கதாக மாறுகின்றது. மிகையான ஆவியாக்கம்

காரணமாகவும், மண்படையைப் பாதுகாக்கும் தாவரப் போர்வையின் செறிவு குறைவடைவதனாலும் மண்ணில் காரத்தன்மை அதிகரிக்கும். உடவளவை தேசிய வனத்தினுள் உவர்த்தன்மை அடைந்த பிரதேசங்களைப் பரவலாக அவதானிக்க முடியும்.

## (iv) மந்தை மேய்ப்பாளர்களின் ஆக்கிரமிப்பு :

ஆரம்பகால மந்தை மேய்ப்பாளர்கள் தமது வளர்ப்பு மாடுகளுடன் சேர்ந்து தேசிய வனத்தினுள் பிரவேசிக்காவிடினும், தற்போது 50 அல்லது 100 மாடுகளுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் நாளாந்தம் சுமார் 200 இடையர்கள் தேசிய வனத்தினுள் நடமாடுகின்றனர். இவர்கள் தமது விலங்குகளை வழி நடாத்துவதுடன் சட்ட விரோதமான முறையில் விறகு, மூலிகைச் செடிகள், உணவுப் பொருட்கள், மான் கொம்பு, மயில் இறகு போன்ற பொருட்களைச் சேகரிப்பதிலும் வேட்டையாடுதல், சேனைப் பயிர்ச் செய்கை மற்றும் கஞ்சாப் பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர். இது தவிர இம்மந்தை மேய்ப்பாளர்கள் பகல் பொழுதில் தங்குவதற்காகத் தற்காலிகமான குடிசைகளைத் தேசிய வனத்தினுள் பரவலாக அமைந்துள்ளதுடன் இவற்றினைப் பல்வேறுபட்ட சட்ட விரோதமான செயல்களுக்கும் பயன்படுத்தி வருகின்றனர்.

இப்பிரதேச மந்தை மேய்ப்பாளர்கள் தமது வளர்ப்பு விலங்குகளுக்கு இளம் புல்லைப் பெற்றுக் கொள்வதற்காக இலை முதிர்ச்சியடைந்த சவன்னாப் புல்வெளிக்கு கோடைப் பருவத்தில் தீ வைக்கின்றனர். இத் தீ பாரியதொரு பிரதேசத்தை எரித்துச் சாம்பலாக்கி விடுகின்றது. இதன் விளைவாக அப்பகுதியின் நுண்ணங்கிகளும், தாவர இனங்களும் முழுமையாக அழித்து விடுகின்றன. இச் செயன்முறை வருடாந்தம், அல்லது வருடத்தில் இரு முறைகள் தொடர்ச்சியாக நடைபெறுவதனால் அப்பகுதியில் எதிர்மறையான தாவரச் சந்தானச் செயல்முறை நடைபெற்று வருகின்றது.

மந்தை மேய்ப்பாளர்கள் தமது வளர்ப்பு மாடுகளுடன் வந்து சேரும் காட்டு மாடுகளைச் சாதுரியமாகப் பிடித்து இறைச்சிக்காகக் கொலை செய்கின்றனர், அல்லது விற்பனை செய்கின்றனர். இதனைப் பிரதான தொழிலாக மேற்கொண்டுவரும் பல வியாபாரிகள் இங்கு நடமாடுவது குறிப்பிடத்தக்கது. இதனைவிட முக்கிய பிரச்சினையானது இம்மந்தை மேய்ப்பாளர்கள் ஆரம்பகட்ட நடவடிக்கையாகத் தேசிய வனத்தின் எல்லைப் பகுதியில் தற்காலிகமாக நாளாந்தம் நடமாடுவதுடன் அடுத்த கட்ட நடவடிக்கையாக அப்பகுதியை நிரந்தரமாக ஆக்கிரமித்து வருகின்றனர். எனவே, 'தேசிய வனத்தின் நில ஆக்கிரமிப்பின் முதற் கட்ட நடவடிக்கை மந்தை மேய்ப்பு' என்பது பொருத்தமானது.

### (v) உல்லாசப் பயணத்துறை மீதான அச்சுறுத்தல் :

வளர்ப்பு மாடுகளின் நடமாட்டம் உல்லாசப் பயணத்துறைக்கும் சவாலாக அமைந்துள்ளது. வளர்ப்பு மாடுகளின் தொல்லை, மற்றும் போட்டித் தன்மை காரணமாக வன விலங்குகள் பயத்தால் அப்பகுதியை விட்டு ஒதுங்கி விடுவதுடன் சில விலங்குகள் தேசிய வனத்தை விட்டு வெளியேறி விடுகின்றன. இதற்குப் பதிலாகத் தேசிய வனத்தினுள் எங்கு பார்த்தாலும் வளர்ப்பு மாடுகள் காணப்படுவதுடன் வளர்ப்பு மாடுகள் எவை, காட்டு மாடுகள் எவை என வேறுபடுத்தி அறிய முடியாத நிலையினை உல்லாசப் பயணிகள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. அதாவது தேசிய வனத்தினுள் பிரவேசித்துத்தான் வளர்ப்பு மாடுகளைப் பார்க்க வேண்டும் என்ற தேவை, நோக்கம் எந்தவொரு உல்லாசப் பயணிக்கும் இல்லை. இந்நிலை தொடருமாயின் உடவளவைத் தேசிய வனத்தின் சூழல்சார் உல்லாசப் பயணத்துறையைப் படிப்படியாக முக்கியம் இழக்கச் செய்துவிடும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

### (vi) தேசியவன முகாமைத்துவத்திற்கு எதிரான அச்சுறுத்தல் :

தேசிய வனத்தினுள் இடம்பெறும் மந்தை மேய்ப்பு நடவடிக்கைகளினால் தேசிய வன முகாமைத்துவம் பல்வேறு வகையான அச்சுறுத்தல்களை எதிர்நோக்குகின்றது. தேசிய வனத்தினுள் நடைபெறும் அநேகமான குற்றச் செயல்களுடன் மந்தை மேய்ப்பாளர்கள் நேரடியாகத் தொடர்பு பட்டுள்ளனர். இப்படிப்பட்டவர்களைக் கைது செய்ய முயற்சித்த பல சந்தர்ப்பங்களில் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இது தவிர யானைகளின் வெளியேற்றத்தினைத் தடுப்பதற்காகப் போடப்பட்டுள்ள மின்சார வேலிகளைத் துண்டித்து மாடுகளை உட்செலுத்துகின்றனர். தேசிய வனத்தின் தென்கிழக்குப் பகுதியில் ஹம்பேகமுவ பிரதேசித்தில் போடப்பட்டுள்ள மின்சார வேலி மந்தை மேய்ப்பாளர்களின் நடவடிக்கைகளினால் செயலிழந்துள்ளது. இவ்வாறு தேசிய வன முகாமைத்துவத்திற்கு எதிராகச் செயற்படும் ஒரு சக்தியாக மந்தை மேய்ப்பாளர்கள் செயற்படுவதனால் தேசிய வனம் உருவாக்கப்பட்டதன் அடிப்படை நோக்கத்தை அடைய முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது எனலாம்.

### முகாமைத்துவ உபாயங்கள் :

உடவளவை தேசிய வனத்தினுள் ஏற்பட்டு வரும் இந்த அனர்த்தம் திடீரென ஏற்பட்டதொன்றல்ல. இது அடிப்படையிலேயே ஒழுங்கற்ற திட்டமிடல் காரணமாக உருவாகியது. எனவே, தேசிய வனத்தின் சூழலியல் முக்கியத்துவத்தை மாத்திரம் நோக்காது பல பரம்பரைகளாக மந்தை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள மக்களின் சமூக, பொருளாதார நிலைமைகளையும் கவனத்தில் கொண்டு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும்.

உடவளவை தேசிய வனத்தின் நிலப்பயன்பாட்டு அமைப்பு ஒழுங்கான முறையில் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டதல்ல. பாதுகாக்கப்பட்ட பகுதியை உடனடுத்து மானிடக் குடியிருப்புக்கள் காணப்படுகின்றன. இதன் விளைவே வளர்ப்பு மாடுகள் நேரடியாகப் பாதுகாக்கப்பட்ட பகுதிக்குள் செலுத்தப்படுகின்றன. எனவே, இதனைத் தவிர்ப்பதற்குப் பாதுகாக்கப்பட்ட பகுதியின் எல்லைப் பகுதியில் 'எல்லை மாறு வலயங்கள்' உருவாக்கப்பட்டு அதில் மரபு ரீதியான நுட்பங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து எல்லைப்புற மக்கள் பயன்படுத்தக் கூடிய சமூகக் காடாக்க உத்திகளை அமுல்படுத்த வேண்டும். அத்துடன் இவ்வலயத்தை மந்தை மேய்ப்பாளர்களின் பயன்பாட்டிற்கும் அனுமதித்தல் வேண்டும்.

தேசிய வனத்தின் எல்லைப் பிரதேசங்களில் வாழும் மந்தை மேய்ப்பாளர்கள் மாத்திரமே இம்மேய்ச்சல் தரையைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவதுடன் ஏனைய தூரப் பகுதி மந்தை மேய்ப்பாளர்களின் வளர்ப்பு மாடுகள் நுழைவதனை முழுமையாகத் தடை செய்ய வேண்டும்.

இத்திட்டத்தினை மக்கள் பங்கேற்பின் மூலம் மாத்திரமே அமுல்படுத்த முடியும். எனவே, இதனை மேலும் வலுப்படுத்துவதற்காக அனுமதி வழங்கப்பட்ட எல்லைப்புற மந்தை மேய்ப்பாளர்களை ஒன்று சேர்த்து ஒரு சங்கத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். இச்சங்கம் நாட்டின் உயிரியல் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடனும் தமது வளர்ப்பு மிருகங்களுக்காக ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் தரையைப் பாதுகாக்கும் பொருட்டும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் தமது சமூகத்தில் அமுல்படுத்தக் கூடியதுமான ஒரு சட்டக் கோவையை மற்றும் ஒழுக்க விதிகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இச்செயல் திட்டத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் அனுமதி வழங்கப்பட்ட மந்தை மேய்ப்பாளர்களிடமிருந்து அவர்களின் வளர்ப்பு மாடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப வருடாந்தம் ஒரு சிறிய தொகையை 'மேய்ச்சல் தரை வரி' யாக அறவிட வேண்டும். இது வெளி உலகிற்கு முதலாளித்துவத்தின் பிரதிபலிப்பாகத் தென்பட்டாலும், அத்துமீறிய வளர்ப்பு மாடுகளின் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு உபாயமாகும். அதாவது ஒரு மந்தை மேய்ப்பாளன் வரி செலுத்தி மேய்ச்சல் தரையைப் பயன்படுத்தும் போது அவன் வரி செலுத்தாத ஒரு மந்தை மேய்ப்பாளனின் வளர்ப்பு மிருகங்களை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கமாட்டான். இங்கு உரிமை தெளிவுபடுத்தப் படுவதனால் மேய்ச்சல் நிலம் பாதுகாக்கப்படும்.

ஒழுங்கான முறையில் வரி செலுத்தும் மந்தை மேய்ப்பாளர்களின் வளர்ப்பு மிருகங்களை இனங் காண்பதற்காக அவற்றின் மீது அடையாளங்களை அல்லது அடையாள இலக்கங்கள் பொறிக்கப்பட வேண்டும். அடையாளமிடப்படாத அல்லது அனுமதிக்கப்படாத வளர்ப்பு மிருகங்கள் மேய்ச்சல் தரையிலும் அத்துமீறிப் பிரவேசித்தால் அதனைப் பிடித்து அதற்கெதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேய்ச்சல் தரையில் தீவனப் பயிர்களின் (உணவுப்) உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதாவது புதிய புல் இனங்களை அறிமுகப்படுத்து வதுடன் கோடை காலங்களிலும் தீவனம் வழங்கக்கூடிய இபில் இபில், மஹோகனி, அகேஷியா, கிலிரிஸீடியா, சடச்சி, முள்வேங்கை போன்ற பல நோக்குத் தாவர இனங்களைப் பயிரிட வேண்டும். அதாவது மந்தை மேய்ப்பாளர்கள் புவி மேற்பரப்புப் புல்லை மாத்திரம் நம்பி இருக்காது சீனா, இந்தியா, நேபாள் நாட்டு மந்தை மேய்ப்பாளர்களைப் போன்று, இலை குழைகளையும், தீனிகளையும் பயன்படுத்த முயற்சி

எடுப்பதனால் சூழல் பாதிப்புக்களிலிருந்து தவிர்ந்து விளைச்சல் அதிகரித்துக் கொள்ளலாம்.

பாதுகாக்கப்பட்ட பிரதேசத்திற்கும், மானிடக் குடியிருப்பிற்கும் இடைப்பட்ட இடை மாறு வலயத்தை மாத்திரமே மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும். அதேநேரம் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தைப் புதிய உத்திகளைப் பயன்படுத்தி கடுமையாகப் பாதுகாக்க வேண்டும். இப்பகுதி வளர்ப்பு மிருகங்களினதும், மானிட நடமாட்டத்திலிருந்தும் முழுமையாகப் பாதுகாக்கப்படல் வேண்டும்.

**முடிவுரை :**

தூர நோக்கற்றதும், ஒழுங்கற்றதுமான திட்டமிடல்களினதும், பலவீனமான முகாமைத்துவங்களினதும் விளைவாக ஏற்பட்டுள்ள தேசிய வனங்களின் எல்லைப் புறப் பிரச்சினை உடவளவைப் பிரதேசத்திற்கு மாத்திரம் உரியதோ அல்லது இலங்கைக்கு மாத்திரம் உரியதோ அல்ல. இது அயனப் பிரதேச நாடுகளில் பொதுவாகக் காணப்படுகின்ற ஒரு பிரச்சினையாகும். எனவே, இதற்கு இப்பிரதேசங்களின் சமூக, பொருளாதார நிலைமைகளும் அடிப்படைக் காரணிகளாக இருக்கின்றன என்பது தெளிவான உண்மை. எனவே, பிரதேச மக்களின் மரபு ரீதியான அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு அப்பிரதேச மக்களை ஒரு சக்தியாகப் பயன்படுத்தி அம்மக்களின் மூலம் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தைப் பாதுகாக்க வேண்டும். இது ஒரு கற்பனைவாதமல்ல. பொருத்தமான தந்திர உபாயங்களுடன் அணுகுவதனால் எமது இலக்கை அடைந்து கொள்ளலாம். வன்மையான சட்டங்கள் சமூக வறுமைக்கும், சமூக நீதிக்கும் எதிரே பலமிழந்து செயலற்றுவிடும். சமூக சக்தி நிலைக்கக் கூடியதும் இலக்கைச் சாதிக்கும் ஆற்றலுடையதுமாகும்.